புதுச்சேரி அரசு

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

துணை இயக்குநர் அலுவலகம், 6, கடற்கரை சாலை, காரைக்கால்

e-Mail: ddfish.kkl@nic.in

தொ. எண்.04368-222616.

எண்: **08/FY/KKL/M/NC/2020-21/07.** தேதி: **02-12-2020**

## மீனவர்களுக்கான வானிலை எச்சரிக்கை

பொருள்: "புரேவி" சூறாவளி – மீனவர்க்கான வானிலை எச்சரிக்கை-தொடர்பாக.

பார்வை எண்: இவ்வலுவலக கடித எண்: 08/FY/KKL/M/NC/2020-21/06 தேதி:27-11-2020.

***************

"புரேவி" புயல் இன்று காலை 8.30 மணி அளவில் பாம்பனில் இருந்து கிழக்கு தென்கிழக்கே சுமார் 420 கிலோமீட்டர் தொலைவிலும் கன்னியாகுமரியில் இருந்து கிழக்கு வடகிழக்கே சுமார் 600 கிலோமீட்டர் தொலைவில் நிலைகொண்டுள்ளது இது இன்று மாலைக்கு மேல் இரவுக்குள் இலங்கையை கடந்து பிறகு நாளை பகலில் பாம்பன் அருகில் நிலைகொள்ளும். பின்னர் மேற்கு தென்மேற்கு திசையில் தென் தமிழக கடற்கரையை ஒட்டி மெதுவாக நகர்ந்து டிசம்பர் 3 அன்று இரவு முதல் டிசம்பர் 4 அதிகாலைக்குள் பாம்பன் - கன்னியாகுமரி இடையே தென்தமிழக கடற்கரையை கடக்கக்கூடும்.

இதன் விளைவாக தென் தமிழக கடலில் காற்றின் வேகம் **55** கிமீ முதல் **90** கி.மீ வரை வீசக்கூடும் என்றும், வடதமிழக கடலில் அலையின் உயரம் **2.7** மீட்டர் முதல் **4.5** மீட்டர் வரை **02-12- 2020** முதல் **04-12-2020** வரை எழக்கூடும் எனவும் கணிக்கப்படுள்ளது.

**எனவே, மீனவர்கள் மறு அறிவிப்பு வரும் வரை கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் இந்த அறிவிப்பினை மீறி மீன்பிடிக்க செல்லும் படகு உரிமையாளர்கள் மீது மாவட்ட நிர்வாகம் சார்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.**

மீனவர்கள் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள்

மீன்பிடி வலைகள் மற்றும் படகு எஞ்சினை தங்களது கிராமத்தின் கடற்கரையில் உள்ள பணிமனையில் (WORK SHELTER) பாதுகாப்பாக வைத்திருப்பதன் மூலம் இயற்கை சீற்றத்தால் அவைகளுக்கு ஏற்படும் சேதங்களை தவிர்க்கலாம் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

மேற்கண்ட விபரங்களை தங்களது கிராமத்தில் ஒலிபெருக்கி மூலம் கிராம மக்களுக்கு தெரிவித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி தங்கள் மீன்பிடி படகுகள் மற்றும் வலைகளுக்கு நேரிடும் சேதத்தை தவிர்க்குமாறு இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

**துணை இயக்குனர்**

பெறுநர்:

மீனவ கிராம பஞ்சாயத்தார்கள்,

1. மண்டபத்தூர், 2. காளிக்குப்பம், 3. அக்கம்பேட்டை, 4. கோட்டுச்சேரிமேடு, 5. கீழகாசாகுடிமேடு, 6. கிளிஞ்சல்மேடு, 7. காரைக்கால்மேடு, 8. கருக்களாச்சேரி, 9. பட்டினச்சேரி, 10. வடக்குவாஞ்சூர்

GOVT. OF PUDUCHERRY * DEPT. OF INFORMATION & PUBLICITY, KARAIKAL *

**நகல்**

1. உதவி இயக்குநர், செய்தி மற்றும் விளம்பர துறை, காரைக்கால்.
2. ஆய்வாளர், கடலோர காவல் நிலையம், காரைக்கால்.

**நகல் சமர்பிக்கப்படுகிறது:**

1. மாவட்ட ஆட்சியர், காரைக்கால்.
2. கமாண்டண்ட், கடலோர காவல் படை, காரைக்கால்.
3. இயக்குனர், மீன்வளம் மற்றும் மீன்வளத்துறை, புதுச்சேரி.
4. துணை ஆட்சியர் (பேரிடர் மேலாண்மை), காரைக்கால்.